1981 ஆகஸ்ட் 27]

திரு வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: தமிழகத்தில் இருக்கிற கிராமங்களில் உள்ள தெருவிளக்குகள் பெரும்பாலும் எரியாமல் இருப்பதற்கு காரணம், அங்கே பணியாற்றுகிற ஊழியர்கள் லைனிலிருந்து நேரடியாக கனக்ஷன் கொடுத்துவிடுகிறார்கள். தெரு விளக்குகள் அடிக்கடி ப்யூஸாக அது ஒரு காரணம். ஆகவே லைனிலிருந்து நேரடியாக தெரு விளக்குகளுக்கு கனக்ஷன் கொடுக்கிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுப்பது பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அதற்குத் தகுந்த ஆதாரங்களைத் தந்தால் அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: இந்த குமிழ், உருண்டை பல்புகளில் திடீரென்று மின்சாரம் பாய்கிற காரணத்தால் அதிகமான அளவிற்கு பல்புகள் ப்யூஸ் ஆகின்றன. ரூ. 1.25 கொடுத்து வால்டேஜ் ஸ்டெபிலைசர் கருவி மாட்ட முடியும் என்று சொல்கிறார்களே, அதைப் பற்றி மின்சார வாரியம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 'வால்டேஜ் ஸ்டெபிலைஸர்' போட்டால் ரூபாய் ஆறு கோடிக்கு மேல் செலவாகும். மிகப் பெருமளவில் செலவாகும். அதற்குமாறாக இப்போது அரசாங்கத்தால் 230 வோல்ட்ஸ் மின்விளக்குகள் போடப்படுகின்றன. இரவிலோ அல்லது லோட் இல்லாதபோதோ வோல்டேஜ் அதிகமாக ஆகிவிடுவதால் இந்தப் பல்புகள் ப்யூஸாகின்றன. 300 வோட்ஸ் பல்புகள் வேண்டுமென்ற வகையில் நாம் வாங்கவேண்டியிருக்கிறது. மின்வாரியத்தைப் பொறுத்தவரையில் லோயஸ்ட் டெண்டர் என்ற அடிப்படையில் வாங்கும்போது பலவகையான பிரச்னைகள் எழுகின்றன. சிலபேர்கள் 230 வோட்ஸ் பல்புகளை 250 வோட்ஸ் பல்புகள் என்று கொடுக்கிறவர்களும் இருக்கிறார்கள். முக்கியமான நிறுவனங்களான பிலிப்ஸ், ஜெனரல் எலக்ட்ரிக்கல்ஸ் போன்ற பெரிய நிறுவனங்களோடு பேசி மின்வாரியம் 250 வோல்ட்ஸ் பல்புகளை, தரமான பல்புகளைத் தரவேண்டும் என்று ஒரு நீண்ட கால அடிப்படையில் அவர்களோடு பேச வேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

காஞ்சி நகரில் பால்விநியோக நிறுவனம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 84—திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியம்: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சி நகரத்திலுள்ள மக்களுக்கு சென்னை நகரிலுள்ளது போல பால் விநியோக நிறுவனம் ஒன்றை அரசு அமைக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இரண்டாம் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் பல ஊர்களில் பால் மற்றும் பால் பொருள் விற்பனை நிலையங்களை தமிழ்நாடு

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் அமைப்பதாக உள்ளது. அதுபோது காஞ்சி மாநகரத்தில் இவ்வித விற்பனை நிலையம் அமைக்கப்படும்.

Supply of Milk to Starred Hotels in Madras City

*Q. No.85–THIRU S. RAJARAMAN: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(a) Whether the Tamil Nadu Milk Producers Co-operative Federation is supplying Milk for the starred hotels at Madras City;

(b) the quantum of milk being supplied per day; and

(c) the price of the milk?

மாணபுமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) அவற்றிற்கு ஒரு நாளில் 280 லிட்டர் பால் வழங்கப்படுகிறது.

(இ) ஒரு லிட்டருக்கு ரூ. 2. 75 என்ற விலையில் வழங்கப்படுகிறது.

திரு. என் .ஸ்எ .வி. சித்தன். மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, 280 லிட்டர் என்ற அளவு ஒரு ஓட்டலுக்கா அல்லது மொத்த ஓட்டல்களுக்கும் சேர்த்து சொல்லப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

ம ண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி. மாண்புமிகு தலைவர் அவர்களே, 7 நிறுவனங்கள் தங்களுக்குத் தேவை என்று விண்ணப்பித்து இருக்கிறார்கள். அந்த 7 நிறுவனங்களுக்கு காலை, மாலை ஆகிய இரண்டு வேளைகளுக்கும் சேர்த்துத்தான் இந்த 280 லிட்டர்.

திரு.வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசின் பால்வள நிறுவனத்திற்கு நேரடியாக இருக்கின்ற வகையில் தமிழகத்திலே பரவலாக பால் அரைக்கும் எந்திரங்களை லைசன்ஸ் பெறாமலேயே வைத்து, பால்வள நிறுவனத்திற்கு எதிராக வியாபாரம் நடத்தப்படுவது இந்த அரசுக்குத் தெரியுமா? அப்படி உரிமம் இல்லாமல் பால் அரைக்கும் எந்திரங்களை வைத்து வியாபாரம் செய்யப்படுவது தடை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை, தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

உசிலை வட்டத்தில் மணற் காற்றுத் தடுப்பு நடவடிக்கைகள்.

*வினா எண் 86—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—